வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந. க. எண். 1019 /அ2 /2022 நாள். 13.05.2022.

பொருள் : குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009– ன்படி 2022–2023 ஆம் கல்வி ஆண்டில் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடர்பாக – 18.05.2022 அன்று கூட்டம் நடைபெறுதல் தவறாமல் கலந்து கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1476/இ1/2022, நாள்.06.04.2022.

-----

பார்வையில் காணும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி 2022–2023 ஆம் கல்வி ஆண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு 25% இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை மேற்கொள்வதற்கான அறிவுரை வழங்கும் பொருட்டு கூட்டம் கீழ்காண் விவரப்படி நடைபெற உள்ளது. மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலமாக தங்கள் ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பள்ளிகளுக்கும் மேற்காண் பொருள் சார்பாக கூட்டத்தில் கலந்து கொள்ள ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மற்றும் மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளின் முதல்வர் / தாளாளர்கள் மற்றும் வட்டாரக்கல்வி அலுவலர்கள் / வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது கூட்டத்தில் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கூட்டம் நடைபெறும் விவரம்**

| **இடம்** | **கூட்டம்<br>நடைபெறும் நாள் மற்றும் நேரம்** |
|---|---|
| அரசு முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி,<br>ரவுண்டானா, வேலூர்–1 | 18.05.2022 பிற்பகல் 2.30 மணி |

குறிப்பு –

**இலவசக் கட்டாயக் கல்வி திட்டத்தின் கீழ் 2022– 2023 சேர்க்கை தொடர்பான பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் இணைப்பில் காணும் நகல் கூட்டத்திற்கு வரும் பொழுது தறவிறக்கம் செய்து தவறாமல் உடன் கொண்டு வர வேண்டும்**

**இணைப்பு – பின்பற்றப்பட வேண்டிய அறிவுரை**

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக்கல்வி அலுவலர், வேலூர்
2. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
4. முதல்வர் / தாளாளர், மழலையர் / தொடக்கப்பள்ளி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளி வேலூர் மாவட்டம்.
5. கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர் (ஒபக) அவர்களுக்கு தகவலுக்காகவும் சார்ந்த வட்டார வளமைய மேற்பார்வையாளர்களை விடுவிக்கும் பொருட்டு பணிந்தனுப்பலாகிறது.

நகல்

தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.